# கொழும்பு மாநகர சபை

## மேல் மாகாண சபையின் கொழும்பு மாநகர சபையின் தீயணைப்பு சேவைத் திணைக்களத்தின் தீயணைப்பு படைவீரர் (Fireman) பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச்செய்தல்.

கொழும்பு மாநகர சபையில் தீயணைப்பு படைவீரர் பதவிகளில் 35 வெற்றிடங்களை நிரப்புவதற்காக மேல் மாகாணத்தில் நிரந்தர வதிவிடமுடைய கீழ்க்காணும் தகைமைகளை கொண்ட பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. **பதவிப்பெயர்** :- மேல் மாகாண அரச சேவையின் கொழும்பு மாநகர சபையின் தீயணைப்பு சேவையின் தீயணைப்பு படைவீரர் பதவி

02. **மாதாந்த சம்பள அளவுத்திட்டம்**:- RS-1(அ.நி.சு.10/2025 இன்படி)
ரூபா. 49,550-7X540- 27X670-71,420

03. **வயதெல்லை** :- வருடங்கள் 18க்கு குறையாதும் 24ஐ அதிகரிக்காதும் இருத்தல்

04. **கல்வித் தகைமை** :- ஒரே தடவையில் சிங்களம்/தமிழ் மொழி மற்றும் கணிதம் உட்பட நான்கு பாடங்களுக்கு திறமைச்சித்திகள் அடங்களாக க.பொ.த (சா.த.) பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன் ஒரே தடவையில் அல்லது இன்னும் ஒரு மேலதிக தடவையில், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் பாடங்களிலும் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

05. **நிபந்தனைகள்** :

- உயரம் செ.மீ. 162 க்கு குறையாதும் உயிரியல் நிறை சுட்டி (BMI) உரிய பிரகாரம் இருத்தல் வேண்டும். (உயிரியியல், நிறை சுட்டி 18.5 முதல் 24 வரை இருத்தல் வேண்டும்.)
- ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தீவில் எந்தவொரு பிரதேசத்திலும் கடமைபுரிவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் உடல் மற்றும் உள ரீதியான தகைமையுடையவராய் இருத்தல் வேண்டும்.
- கண்பார்வை- மூக்குக்கண்ணாடி அல்லது பொருத்தும் கண்வில்லை இல்லாது கண்பார்வை ஆகக்குறைந்தது 6/6 மற்றும் 6/12 இக்கு இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும் என்பதுடன் நிறங்கள் பற்றிய பார்வை சாதாரணமாகவும் இருத்தல் வேண்டும்.
- செயற்கையாக உடலில் மாற்றங்கள் செய்திருக்கக்கூடாது. (உதா: பச்சைக் குத்துதல்)

06. **வேறு தகைமைகள்**:

- இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்
- விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு அண்மித்த 03 வருடகாலம் தொடர்ச்சியாக மேல் மாகாணத்தில் நிரந்தர வதிவிடமுடையவராய் இருத்தல் வேண்டும்.
- திருமணமாகாத ஆண் ஒருவராக இருத்தல் வேண்டும்.
- சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் சட்டவிரோத செயற்களில் ஈடுபடாத ஒருவரென பொலிஸ் அறிக்கை மூலம் நிரூபித்தலும் வேண்டும்.

இந்தப் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவையான அனைத்து தகைமைகளும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு எல்லாவகையிலும் பூர்த்திசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்

07. **ஆட்சேர்ப்பு செய்யும் முறை:-**

I. எழுத்துமூல பரீட்சை மற்றும் தொழில்சார் (செய்முறை) பரீட்சை மூலம் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் திறமை ஒழுங்கு முறைக்கமைய வெற்றிடங்களுக்காக பயிலுநர் தீயணைப்பு படைவீரராக தெரிவுசெய்யப்படுவார்.
II. பயிற்சிகளை ஆரம்பிக்க முன்னர் சகல பயிலுநர் தீயணைப்பு படைவீரரும் உடல், உள, தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.
III. தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் ஒரு வருடகால பயிற்சிப்பாடநெறியொன்றை பயிலவேண்டும். பயிற்சிக் காலத்தில் மகிழ்ச்சிகரமான வேலை மற்றும் நடத்தையைக் கொண்டிராத அல்லது எதிர்பார்க்கப்படும் தொழில் தரத்தை அடைய முடியாத பயிலுநர்களை எதுவித நட்டஈடும் இன்றி பயிற்சியில் இருந்து நீக்கப்படுவார்கள்.
IV. வெற்றிகரமாக உரிய பயிற்சியை பூர்த்திசெய்கின்ற பயிலுநர் தீயணைப்பு படைவீரர்கள் தீயணைப்பு படைவிரர் பதவிக்கு நிரந்தரமாக ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்கள். பயிற்சிக்காலம் நிரந்தர சேவைக்காலத்திற்குள் சேர்க்கப்படும் என்பதுடன் உரிய சம்பள அளவுத்திட்டத்தில் இரண்டாவது படிமுறையில் வைக்கப்படுவார்.
V. பயிற்சிக் காலத்தினுள் மாதாந்தம் ரூபா 10,000/- கொடுப்பனவு செலுத்தப்படும்.
VI. பயிற்சிக்காலத்தினுள் எந்தவொரு பயிலுநர் தீயணைப்பு படைவீரருக்கும் திருமணம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.
VII. பயிற்சிக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட பயிலுநர் தீயணைப்பு படைவீரர்கள் நிரந்தரப் பதவிக்கு நியமிக்கப்பட்ட பின்னர் நியமிக்கப்பட்ட திகதியில் இருந்து 05 வருடகாலம் உரிய உள்ளூராட்சி மன்றத்தில் சேவை புரிவதாக நியமன அதிகாரியுடன் ரூபா 500,000/- பெறுமதியுடைய பிணையொன்றில் பயிற்சியை ஆரம்பிக்கும் சந்தர்ப்பத்தில் கைச்சாத்திட வேண்டும்.
VIII. பயிலுநரின் விருப்பத்திற்கமைய பயிற்சிக் காலத்தினுள் பயிற்சியில் இருந்து விலகும் பட்சத்தில் பயிற்சிக்காக செலவு செய்யப்பட்ட அனைத்து செலவுகளையும் நிறுவனத்திற்கு செலுத்துதல் வேண்டும்.
IX. தீயணைப்பு படைவீரர் பதவிக்கு நியமனம்பெற்ற நியமனதாரர்களுக்கு கொழும்பு மாநகர சபை அதிகார எல்லைக்குள் குடியிருக்கும்படி பணிக்க முடியும்.

08. **பதவிகளின் தன்மை**:-

- இந்த பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் பெறக்கூடியதொன்றுமாகும். தங்களுக்குரித்தான ஓய்வூதியச் சம்பள முறை தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படக் கூடிய கொள்கைரீதியான தீர்மானங்களுக்கு நீங்கள் கட்டுப்படல் வேண்டும்.

- விதவைகள், அனாதைகள் மற்றும் தபுதாரர் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புப் பணம் செலுத்த வேண்டும்.

- இந்த ஆட்சேர்ப்பு நிரந்தர அடிப்படையில் செய்யப்படுவதுடன் கொழும்பு மாநகர சபையினால் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு நீங்கள் கட்டுப்பட வேண்டும்.

- விண்ணப்பதாரிகள் கீழ்க்காணும் மாதிரிப்படிவத்தின் பிரகாரம் A4 அளவைக் கொண்ட கடதாசியின் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி தட்டெழுத்து செய்து அல்லது தெளிவான கையெழுத்தினால் எழுதி தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை **"மாநகர ஆணையாளர், மாநகர ஆணையாளர் அலுவலகம், கொழும்பு மாநகர சபை, நகர மண்டபம், கொழும்பு 07,"** எனும் விலாசத்திற்கு 2026.03.20 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெறும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவம் அடங்கும் கடிதயுறையின் இடது பக்க மேல் மூலையில் "**பயிலுநர் தீயணைப்பு படைவீரர் பதவிக்கு**" என குறிப்பிட வேண்டும்.

- இந்தப் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவையான அனைத்து தகைமைகளும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு எல்லாவகையிலும் பூர்த்திசெய்யப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் உரிய தினத்தின் பின்னர் கிடைக்கும் மற்றும் தகைமைகள் பூர்த்திசெய்யப்படாத முழுமையற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். இந்தப் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்தல் தொடர்பிலான இறுதித் தீர்மானம் நியமன அதிகாரிக்கு உரித்தானது.

பாலித்த நாணாயக்கார
மாநகர ஆணையாளர்

2026.02.